09.09.2025
OS. No. 51/2020
**PW.1 – விக்னேஷ்**

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–**</u>

கோவிந்தசாமி தாக்கல் செய்துள்ள வழக்குகள் பற்றி எனக்கு தெரியும். கோவிந்தராஜ் உடன் சேர்ந்து அந்த வழக்குகளை நாங்கள் நடத்தவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கின் சொத்து இந்த வழக்கில் 11–ஆவது அயிட்டம் என்றால் சரிதான். என் தாத்தாவுடன் பிறந்தவர்கள் ஐந்து பேர் என்றால் இருக்கலாம், அவர்களுடைய பெயர் எனக்கு தெரியாது. அதில் பெரியசாமி என்பவர் உயிருடன் இருக்கிறார் என்றால் சரிதான், மேற்சொன்ன பெரியசாமியுடன் எங்களுக்கு பேச்சுவார்த்தை உள்ளது என்றால் இல்லை. பெரியசாமிக்கு கர்ணன் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். கர்ணனுடன் எங்களுக்கு பேச்சுவார்த்தை இல்லை. பெரியசாமி மகன் கர்ணனன்தான் எங்களைத் தூண்டி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் சித்தப்பா பெருமாள் மற்றும் அத்தை போதும்பொண்ணு ஆகியோர்களை தெரியும். பெருமாள் கல்யாணத்திற்கு நாங்கள் போகவில்லை என்றால் சரிதான், போதும்பொண்ணு கல்யாணத்திற்கு சென்றோம். அப்போது கூட்டுக்குடும்பமாகதான் இருந்தோம். நான் டிகிரி முடித்துவிட்டேன். நான் படிக்கும்பொழுது போக்குவரத்துச் செலவுகள், படிப்பு கட்டணம் ஆகியவற்றை நாகராஜ்தான் செய்தார் என்றால் சரியல்ல, என் அம்மாதான் செய்தார். தாவா 1,3,10 அயிட்ட சொத்துக்களை தவிர்த்து மற்ற அயிட்ட சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று பேச்சுவார்த்தை நடந்ததா என்றால், அவ்வாறு பிரித்துக்கொள்ளலாம் என்று பிரதிவாதிதரப்பு வழக்கறிஞர்தான் கூறினார், மற்றவற்றை பின்னாள் பார்த்துக்கொள்ளலாம் என்றும் கூறினார். அந்த பேச்சுவார்த்தைக்கு ஊர்த்தலைவரை நான் அழைத்துவந்தேனா என்றால், அவர்தான் அழைத்துவந்தார். சின்ன தாத்தா பெரியசாமியை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் கல்லூரி படிக்கும்பொழுது என்னுடைய படிப்பு மற்றும் இதரச்../

செலவுகளை நாகராஜ்தான் செய்துவந்தார் என்றால் சரியல்ல. பாகம் பிரிப்பது சம்பந்தமாக ஊர் பஞ்சாயத்து தலைவர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்தது என்றால் சரியல்ல. பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. தாவா 1–ஆவது அயிட்ட சொத்தில் சர்வே எண்.300/56டி என்ற சொத்தை என் தாத்தா ஆறுமுகம் சின்ராசு, கணேசன் ஆகியோர்களுக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல, அந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அது சின்ராசு, கணேசன் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல, தரிசாகதான் உள்ளது. என் அப்பாவிற்கு மருத்துவ செலவாக இரண்டு லட்சம் ரூபாய் நாகராஜ் செய்தார் என்றால் சரியல்ல. 1,3,10 அயிட்ட சொத்தை தவிர்த்து மற்ற சொத்தை பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று பேச்சுவார்த்தை நடந்தது என்றாலும், அந்த பேச்சுவார்த்தையின்போது கடன்களிலும் செலவுகளிலும் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னபோது, அதை ஏற்றுக்கொள்ளாமல் நான் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர் வழக்குரைக்கு நான் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2004–ஆம் ஆண்டு என் அம்மா இலுப்பூரில்தான் இருந்தார் என்றால், எனக்கு ஞாபகமில்லை. கோவிந்தசாமி என்பவர் நாகராஜ் வகையறா மீது தாக்கல் செய்த தனிநபர் புகார் ஒன்று சிசி.684/2004 என்ற வழக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. அந்த புகார் மனுவில் என் அப்பாவும் தரப்பினர் என்றால் தெரியாது. கோவிந்தசாமி வகையறாவுடன் சேர்ந்துக்கொண்டு நான்தான் பாகம் பிரிக்க ஒத்துவரவில்லை என்றால் சரியல்ல. 2004–ஆம் ஆண்டு நான், என் அம்மா இலுப்பூரில்தான் குடியிருந்தோம் என்றாலும், கூட்டுக்குடும்பமாக இல்லை என்றாலும் சரியல்ல. 3–ஆவது அயிட்ட சொத்து என் பாட்டி தனிப்பட்ட முறையில் தன்னுடைய சுய பணத்தைக் கொண்டு 1981–ஆம் ஆண்டு கிரையம் பெற்ற தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்து நான் பாகம் கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா அயிட்டம் எண்.6–இல் வரிசை எண்.8, சர்வே எண்.291/7 என்ற சொத்தை கணேசன், சின்ராசுதான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், அந்த சொத்தை என் தாத்தா ஆறுமுகம் வாய்மொழியாக விற்றுவிற்றார் என்றால் சரியல்ல. சிவகாமி அம்மாள் பெயரிலுள்ள சொத்தில் நான் பாகம் கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. ../

உரிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>: இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.